
# சுதந்திரன்
SUTANTIRAN



வள்ளுவராண்டு 2014
ஆவணி 31
ஜூலை 16
புதன் (16-9-1981)
நிறுவியது 1947
புத்தகம் 35
இதழ் 28
☎ 8164
விலை: சதம் 75


# 5 கோடி தமிழர்களின் ஆதரவுக் கரங்கள்!

## தமிழ்நாடு முழுவதும் ஹர்த்தால் வெற்றி!

**இலங்கையில் வாழும் 40 இலட்சம் தமிழ் பேசும் மக்களும் ஆதரவற்ற அநாதைகள் அல்ல—அவர்களுக்குத் துன்பம் என்றால், கண்ணீர் சிந்தவும் எதிர்ப்புக் குரல் கொடுக்கவும் இருபது மைல் தூரத்தில் 5 கோடித் தமிழர்கள் இன உணர்வோடு ஒன்றுபட்டு நிற்கின்றனர் என்பதை செப்டம்பர் 12 ஆம் திகதி சனிக்கிழமை தமிழ் நாட்டின் சகல அரசியற் கட்சிகளின்ஆதரவுடன் தமிழக அரசு முன்னின்று நடத்திய 'ஹர்த்தால்' எடுத்துக் காட்டிவிட்டது.**

இலங்கையில் தமிழர்கள் மீது கட்டவிழ்த்து விடப்பட்டுள்ள வன்முறையை எதிர்த்தும் வன்முறையால் பாதிக்கப்பட்ட தமிழர்களுக்கு அனுதாபம் தெரிவித்தும், இலங்கைத்தமிழர் பிரச்சினையின்பால் இந்திய அரசின் கவனத்தை ஈர்க்கவும் நடைபெற்ற இந்த ஹர்த்தால் தமிழ்நாட்டின் வரலாறு காணாதஅளவுமுழு வெற்றிபெற்றது.

தமிழ் நாட்டின் தலைநகரானசென்னைஉட்பட, முக்கிய நகரங்கள் அனைத்தும் வெறிச் சோடிக்கிடந்தன: பேருந்துக்கள் டாக்சிகள், சைக்கிள்கள் ரிக்ஷாக்கள் ஆட்டோரிச்ஷாக்கள் கார்கள் எதுவுமே வீதிகளில் காணப்படவில்லை. ரெயில் போக்குவரத்தும் பெருமளவு கட்டுப்படுத்தப்பட்டிருந்ததுஅரசுஅலுவலகங்கள் செயற்படவில்லை தொழிற்சாலைகள் அனைத்தும் மூடிக் கிடந்தன. கடைகள், உணவு விடுதிகள் அனைத்தும் மூடிக் கிடந்தன.

தமிழ் நாடு முழுவதும் 14 மணிநேரம் தொடர்ச்சியாக ஸ்தம்பிதநிலையடைந்திருந்தது.

ஹர்த்தாலுக்கு முதல் நாளான 11-9.81 இல் சென்னை வந்திருந்ததிருமதி இந்திராகாந்தி, "இலங்கைத் தமிழர்களுக்கு இழைக்கப்பட்டஇன்னல்களைக் குறித்துத்தாம் கவலையடைவதாக" கூறியிருந்தார்.

"இலங்கைத் தமிழர்களுக்கு ஏற்பட்ட இன்னல்களுக்கு தமிழ்நாடு எதிர்ப்புத் தெரிவிப்பதைத் தாம்தவறு என்று கூறவில்லையென்று தெரிவித்த இந்தியப் பிரதமர்- ஹர்த்தால்போன்ற நடவடிக்கைகளினால் இந்தியாவின் உற்பத்தி பாதிக்கப்படும் என்பதே தமதுகவலையென்று கூறினார். ஹர்த்தாலினால் தமிழ் நாட்டின் உற்பத்தி ரூபா 50 கோடிமுதல் 60 கோடிவரை பாதிப்படைந்தது,

அத்துடன் இலங்கையில் கொலையுண்ட தனபதியின் இல்லத்துக்குவிஜயம்செய்த இந்தியப்பிரதமர் திருமதி காந்தி; தமதுஉதவிநிதியாக தனபதியின் குடும்பத்தினருக்கு ஐயாயிரம் ரூபா கொடுத்ததுடன், கணவனைப் பறிகொடுத்த தனபதியின் துணைவியாருக்கும்பிள்ளைகளுக்கும் ஆறுதல் கூறினர்-

தனபதியின் இழப்புக்கு நட்டஈடுகோரி இந்திய வெளிவிவகார அமைச்சர் நரசிம்மராவ் இலங்கை அரசுக்குக் கடிதம் எழுதியிருப்பதாகவும் திருமதி இந்திரா காந்தி தெரிவித்தார்.

இலங்கைத் தமிழர் பிரச்சினையில் இந்தியத் தமிழகம் காட்டும் ஆர்வம் தமக்கு வியப்பளிப்பதாகவும் இலங்கைத்தமிழர்துன்பம் துடை

—4ம்- பக்கம் பார்க்க

## திமுக எம். எல். ஏ. உட்பட 72 தொண்டர்கள் கைது!

இலங்கைத் தமிழர்கள் மீது கட்டவிழ்த்து விடப்பட்ட வன்முறையைக் கண்டித்தும், தமிழர்களுக்கு ஆதரவு தெரிவித்தும், சென்னையிலுள்ள சிறீலங்காத்துணைத் தூதரகத்தின் முன் எட்டாவது நாளாகச் சட்டத்தை மீறி ஊர்வலம் நடத்தி மறியல் செய்யப்போன திராவிடமுன்னேற்றக்கழகத்தைச் சேர்ந்த சட்டமன்ற உறுப்பினர் திரு. எஸ், பாலன் உட்பட 72 திமுகழகத்தினர் 11-9-81 இல் கைதுசெய்யப்பட்டுவிளக்கமறியலில்வைக்கப்பட்டனர்,

## பகிஷ்கரிப்பு தொடர்பாக ஆராய கூட்டணியின் பொதுச்சபை கூடுமா?

யாழ்ப்பாணத்தில் அபிவிருத்திச் சபைத் தேர்தல் காலத்தில் இடம்பெற்ற பொலீஸ் அட்டூழியங்களையடுத்து,ஐந்து அம்சக்கோரிக்கையை முன்வைத்து தமிழர் விடுதலைக் கூட்டணிநாடாளுமன்றப் பகிஷ்கரிப்பில் ஈடுபட்டுவருகிறதல்லவா?

இந்த ஐந்து அம்சக் கோரிக்கைகளில் அதிமுக்கியமான கோரிக்கையான அனைத்துலக விசாரணைக்குழு நியமிப்பது உட்பட எந்த ஒரு கோரிக்கையும்இதுவரைஅரசினால் ஏற்றுக்கொள்ளப்படவில்லை. எனவே இது சப்பந்தமாக ஆராயவும் அடுத்த நடவடிக்கைமற்றித்தீர்மானிக்கவும் தமிழர் விடுதலைக் கூட்டணியின் பொதுச்சபை உடனடியாகக் கூட்டப்படுமா என்று தமிழ் அரசியல் வட்டாரங்கள் கேட்கின்றன.

கடைசியாக நடைபெற்ற கூட்டணியின் பொதுச்சபைக் கூட்டத்தில், ஐந்து அம்சக் கோரிக்கைகளை முன்வைத்து த.வி.கூ.எம். பீக்கள் தமது பகிஷ்கரிப்பைத் தொடர வேண்டும் என்றும், மூன்று மாத முடிவில் கூட்டணியின் பொதுச்சபை கூடி நிலைமையை ஆராய்ந்து அடுத்த நடவடிக்கை பற்றித் தீர்மானிப்பது என்றும் முடிவு

— 4ம்- பக்கம் பார்க்க

## "இலங்கைப்பிரச்சினையைவெளிநாட்டு விவகாரம் என்று இந்தியா ஒதுக்கிவிட முடியாது"

### டெல்லி மாநாட்டில் தமிழக அரசின் பிரதிநிதி சனார்த்தனம் வலியுறுத்து!

"இலங்கையில் தமிழர்கள் படுகொலை செய்யப்படுவதை வெளிநாட்டு விவகாரம் என்று விட்டுவிடக் கூடாது" என்று தமிழக மேலவை உறுப்பினர் திரு, இரா. சனார்த்தனன் டெல்லியில் நடைபெற்ற மாநாடொன்றில் எடுத்துக் கூறியுள்ளார்.

"சபையிலும், சபையின் வெளியிலும் உறுப்பினர்கள் நடவடிக்கைகள்" என்னும் தலைப்பிலான அகில இந்தியக் கருத்தரங்குஒன்று டெல்லியில் நடந்தது.

பாராளுமன்றக் குழுவின் சார்பில் 3 நாள் நடந்த இக் கருத்தரங்குக்குபேராசிரியர் எச்.என். முகர்ஜி தலைமை தாங்கினர். இந்தியப் பாராளுமன்ற சபாநாயகர் திரு. பலராம் கருத்தரங்கைத் தொடக்கி வைத்தார்.

தமிழக அரசின் சார்பில் டாக்டர் இரா.சனார்த்தனம் எம்.எல்.சி. கலந்துகொண்டு பேசினர். அப்போது அவர் கூறியதாவது:-

"சமீபத்தில் இலங்கையில் தமிழர்கள்பட்ட அவதி அனை

—4ம்- பக்கம் பார்க்க

**தமிழ் ஈழத்தேசிய இனத்தின் விடுதலைக் குரல்**

# தமிழின விடுதலைப் போர் சிலருக்கு உயிர்ப் பிரச்சினை பலருக்கு உடல் பிரச்சினை!

## அமரர் அரியநாயகத்தின் நாட்குறிப்பிலிருந்து சில பகுதிகள்



தமிழ் மொழியின் விடுதலைக்காகவும் வளர்ச்சிக்காகவும்தன்னையும்தனது குடும்பத்தையும் ஒப்படைத்துசுயநலம் கருதாமல் வாழ்ந்த அமரர் அறப்போர் முன்னணித் தலைவர் ஆர், டபிள்யூ. வீ, அரியநாயகம் நினைவு நாள் (12,9.31) செப்டம்பர் பன்னிரண்டாம் நாள் சனிக்கிழமை தமிழீழம் நினைவு கூர்ந்தது.

பனாகொடைச் சிறைச் சாலையிலே ஆறுமாதங்களுக்கு மேலாக பல தமிழ்த் தலைவர்களுடனும்கூட சத்தியாக்கிரகம் செய்து சிறை வைக்கப்பட்டிருந்த வேளையில் அவர் தமிழின விடுதலைக்கீதமான எங்கள் ஈழத் தமிழ் நாடு இசை வாழும் பொன்னாடு எனும் பாடலை இயற்றினார்- அத்துடன் இல்லாமல் திருகோணமலையில் தமிழர்கள் அனைவரும்கூடிய வேளையில் தமிழர்கூட்டணி என்று விடுதலை இயக்கமான தமிழர் கூட்டணிக்குப்பெயரையும் வைத்தார்,

தனது ஆசிரியர் பதவி முகாமையாளர் பதவிகளைக் கூட இனத்தின் விடுதலைக்காகத் தியாகம்செய்தஇவர் செனட்டர் பதவியை அரியநாயகம் ஏற்க வேண்டும் என்று தலைமைப்பீடம்கோரிக்கைவிடுத்தபோது தனக்கு எந்தப் பதவியும் வேண்டாம் என்று நிராகரித்தார்,

பனாகொடை சிறையில் அமரர் அரியநாயகத்தினால் எழுதப்பட்ட டைரியில்இருந்து சில பகுதிகள் இதோ.—

"துள்ளித்திரியும் எண்ண ஓட்டமுள்ள வாலிபர்களை பார்க்... ம் துவண்டு தூங்கும் கிழ ... களின் எண்ணம் வெளியேறத்துடித்தது விந்தையே. கீழே இறங்குவதையும் விளையாடுவதையும் நான் தவிர்த்திருந்தாலும் எனது அறையில் எனக்கு நிறைய தேகாப்பியாசம் செய்வதற்கு இடமிருந்தது. பகல் பொழுதில் கொசு வேட்டையாடுவதும்இரவில் நுளம்பு வேட்டையாடுவதும் சுவராசியமான பொழுது போக்காயிருந்தது. நுளம்பு கொட்டிவிடுவதை என்னமோ சகித்துக்கொள்ளலாம் ஆனால் அதுகாதில்பாய்ச்சும் கானரசம்தான் சகிக்க முடியாதது.

சிங்களம் மாத்திரம் என்னும்ஓசையைநான்எவ்வளவு வெறுத்தேனோ அதேபோல் நுளம்புப் பாட்டின் ஓசையும் எனக்கு வெறுப்பைத் தந்தது. நீண்டபொழுது விழித்திருந்து நுளம்புகளுடன் போராடுவேன்.

யாழ்ப்பாணம் சென்ற காணியமைச்சருக்கு தின்னவேலி கன்னிப் பெண்கள் (விவசாயப் பாடசாலை) சிங்களப்பாட்டுப்பாடி கைவழி நயனம் செல்லக் கண்வழி மனமும் செல்ல ஆடி வரவேற்ற பத்திரிகைச் செய்தியை (30.6.61) வாசித்துப் பேரதிர்ச்சியடைந்தோம்.

இங்கேதமிழ்காக்கச்சிறைபட்ட செம்மல்கள் பலரே தமிழ்பேச வெட்கப்பட்டு ஆங்கிலத்திலேயே பேசிக்கொண்டு இருக்கும்போது அங்கே அது நடந்ததில் ஆச்சரியப்படுவதற்கு ஒன்றுமில்லை என்று எண்ணவேண்டியுள்ளது.

தாய் மொழியில் பேசுவதைத் தன்மானக்குறைவாகக் கருதும் சுயகௌரவவாதிகள் மொழி உரிமைப் போரில்சந்தர்ப்பவசத்தால் சிறைவாசம் செய்வதனால் அவர்கள் உள்ளம் தாய் மொழிப் பற்றுடையதாக மாறிவிடும் என்று என்னால் ஜீரணிக்க முடியாது.

தேவாரதிருவாசகங்களும் சில புராண இலக்கியங்களுமுள்ள அந்தத்தமிழ் மொழியால் இன்றுள்ள உலக வாழ்வுக்குபயன் தரக்கூடியஒன்றுமேயில்லை. நெருங்கிவாழ வழி செய்யும்இன்றையவிஞ்ஞான உலகுக்கு ஒப்ப நமது வாழ்க்கையும் ஓடவேண்டுமானால் ஆங்கில மொழியினால்தான் சாத்தியமாகும் என்ற நம்பிக்கையைமாற்றியமைக்க நான் முயற்சிசெய்வது ஈற்றில் அவர்கள்.கோபத்தைத் தூண்டிவிடுவதாகவே முடிகின்றது,

இவைகளை யெல்லாம் நான் சிந்திக்கும் போது தமிழ்உரிமைப்போர் சிலருக்குஉயிர்ப்பிரச்சினையாகவும் பலருக்கு உடற் பிரச்சினையாகவும் இருப்பதை உணர முடிகின்றது,

எங்கள் போராட்டம் பலர் சொல்வதையும் சிலர் நினைப்பதையும் போல் ஓர் பொருளாதாரப் போராட்டமல்ல.தொன்மையும்சிறப்பும்வாய்ந்ததாய்மொழியாம் தமிழ் மொழியை எங்கள் உள்ளத்திலும் எங்கள் அன்றாட வாழ்க்கையிலும் எங்கள் பிரதேசத்திலும் அரியணை ஏற்றும் ஜீவமரணப்போராட்டம்இதுஎன்பதை அழுத்தம் திருத்தமாகஅறைகூவிச் சொல்வதில் ஆனந்தமும்பெருமையும் அடைகின்றேன்.

என்கண்ணுக்கு சிலவேளைகளில் பக்கத்துக்காட்சிகள் மறைந்து விடும்தமிழ்இனத்தின் கைகளைப் பிணைத்திருக்கும் இரும்பு விலங்குகள் தான்தோற்றம்தரும்நீண்ட போதுபித்தன்போல் விறைப்புடன் இருந்து விடுவேன்.

சிறை என்றால் தொடை நடுங்கும் கோழைகளாகவோ பதுங்கிவாழ்வதற்குப் புகலிடம் தேடும் பயந்தாங்கொள்ளிகளாகவோ பணம் என்றால்பல்லை இளிக்கும் பச்சோந்திகளாகவோ உத்தியோகம் என்றால் உதட்டை நக்கும் உன்மத்தர்களாகவோ வாழும் வாழ்வு இனியும் ஈழத்தமிழர்களுக்கு இனிக்கப்போவதில்லை.

சுதந்திரம் இழந்த இனம் மற்ற எல்லாவசதிகளோடும் வாழ்ந்தாலும் அதிகாரமற்ற வாழ்வுதான் என்பதை உணரத்தமிழன் தலைப் பட்டுவிட்டான்........"

—பரணீதரன்
திருகோணம[லை]

---

## வாசகர் தருகிறது

### தொண்டமானின் வேண்டாத பதில்

கடந்த 5.9.81 சனிக்கிழமை வெளியான வீரகேசரி பத்திரிகையில் கீழ் காணும் செய்தி பிரசுரமாகியிருநதது திருச்சியில்செய்தி நிருபர்கள் கேள்விகளுக்கு பதிலளித்தஅமைச்சர் தொண்டமான் அவர்கள் பின் வருமாறு கூறுகிறார்—

சமீபத்திய இலங்கைத் தமிழர்களின் மேற்குஜேர்மனிக் குடியேற்றம் பற்றி அமைச்சர் தொண்டமான் தெரிவிக்கையில்—

"சில உள்நோக்கம்கொண்ட கிறிஸ்தவமிஷனரிமார்கள் வெளிநாடுகளில் சிறந்த வாழ்க்கைக்குவாக்குறுதிகளினால் அவர்களுக்கு ஆசையை ஊட்டினார்கள் இது மிகவும் வருந்தத்தக்கதும் கண்டனத்துக்குரியதுமாகும்— இவ்வாறு தொண்டமான் கூறினார்.

மாண்புமிகு அமைச்சர் தொண்டமான் அவர்களுடைய பதிலை நான் ஆ[ட்]சேபிக்கின்றேன் செய்திநிருபர்கள் கேட்ட கேள்வி ஒன்று அமைச்சர் அவர்கள் கூறும் பதில் வேறொன்றாய் இருக்கிறது.உண்மையை உண்மையாகக்கூறாவிட்டாலும்வேறு இடத்தையும் முக்கியமாக மதத் தொண்டர்களையும் சம்பந்தமில்லாத விடயத்தில் இழுக்கவும் பழிசுமத்தவும் வேண்டாத விளக்கங்களைப் பரப்பாமலும்இருக்கலாம்.

அமைச்சர்அவர்கள் கூறுவதுபோன்று கிறிஸ்தவ மிசனரிமார்களிடம் உள்நோக்கமும்இல்லை.அவர்கள் தூண்டுவதும் இல்லை: மாறாக இத்தகைய இளைஞர்களையிட்டு கிறிஸ்தவ மிஷனரிமார்கள் கண்ணீர் வடிக்கிறார்கள் தங்களுடைய எதிர்காலபடிப்பை பாழாக்கி வளமுள்ள வருங்காலத்தை வீணாக்கி வெறும்பணம் உழைப்பு என்று ஓடுகின்றார்களே என்று துக்கப்படுகிறார்கள்- மிஷனரிமார் வேதனைப் படுகிறார்கள். டாக்டர்களாக பொறியியலாளர்களாகஉருவாக வேண்டிய இளைஞர் சமுதாயம் பணம் பணம் உழைப்பு என்று அயல்நாடுகளுக்குப்போவதனால் எதிர்காலம் இருள் சூழ்ந்ததாக ஏற்படப்போகிறதே என்று வருந்துபவர்களே கிறிஸ்தவமிஷனரிமார்கள். மாறாக உள்நோக்கம் கொண்டு யாரும் ஊக்குவிப்பவர்களாகஇல்லைஎன்பதைதெளிவுபடுத்த விரும்புகிறோம், உண்மை இதுவே.

—மறையாசிரியர்

நிக்கொலஸ்செல்வராஜா

---

### தமிழீழ மக்களின் சுயநிர்ணய உரிமைக்கு இந்திய கம்யூனிஸ்ட் கட்சி அங்கீகாரம்!

#### கல்யாணசுந்தரம் எம். பி. தகவல்!

"இலங்கையின் வடக்கு கிழக்குப்பகுதிகளில் வாழும் தமிழ் தேசிய இனத்தின்சுயநிர்ணய உரிமையை அகில இந்திய கம்யூனிஸ்ட்கட்சி அங்கீகரித்துள்ளது,"

இவ்வாறு அண்மையில் இலங்கைத்தீவுக்கு வந்து திரும்பிய இந்திய கம்யூனிஸ்ட்கட்சி (மாஸ்கோ சார்பு) தலைவரும் இந்திய மாநிலங்கள் அவையின் உறுப்பினருமான திரு.எம் கல்யாண சுந்தரம் பத்திரிகையாளருக்கு அளித்த பேட்டியில் தெரிவித்தார்.

இலங்கையில் தமிழினம் தாக்கப்படுவதற்கு அமெரிக்காவே பின்னணியில் இருக்கலாமென்றும் ஏற்கெனவேபாகிஸ்தானிலும்வங்கதேசத்திலும், இத்தகைய நடவடிக்கைகளில் அமெரிக்காஈடுபட்டிருக்கிறதென்றும் திரு. கல்யாண சுந்தரம் அபிப்பிராயம்தெரிவித்தார். அவர் மேலும்கருத்து வெளியிடுகையில் கூறியதாவது:—

"யாழ்ப்பாணத்தில் நிகழ்ந்த வன்செயல்களின்போது யாழ்பொதுசன நூலகம், யாழ் எம்.பியின் இல்லம், புத்தகசாலைகள், கடைகள், ஈழநாடுபத்திரிகாலயம் ஆகியவற்றுக்கு தீயிடப்பட்டதானது உலகத் தமிழர்களுக்கு செய்யப்பட்ட அநீதியாகும்.தமிழருடைய கலாசாரத்தை அழிக்கும் நோக்கம் கொண்ட வெறிபிடித்த ஒரு கூட்டத்தின் திட்டமிட்ட அநாகரிகச் செயல் இதுவாகும்.

யாழ்ப்பாணத்திலும் இதனைத் தொடர்ந்து கிழக்கு மாகாணத்திலும், மலையகத்திலும் தமிழ்மக்கள் மீது கட்ட விழ்த்துவிடப்பட்ட வன்செயல்கள் குறித்து நான் மிகவும் வேதனையும், அதிர்ச்சியும் அடைகின்றேன்- இவற்றை அவதானிக்கும்போது இந்தச்சம்பவங்கள்தற்செயலாக நிகழ்ந்ததாக எனக்குத்தோன்றவில்லை- திட்டமிடப்பட்ட தாக்குதல் நடைபெற்றுள்ளது-

யாழ் பொது நூலகம்எரிக்கப்பட்டதுபெருங்கொடுமையாகவே எனக்குத் தோன்றுகிறது. தேடக்கிடைக்காத எத்தனையோ அரும்பெரும் பொக்கிஷங்கள் எரிந்து சாம்பராகிவிட்டன.தீயிடப்பட்ட எத்தனையோ கைப்பிரதிகளை இனிமேல் காணவேமுடியாது, கிடைக்கவும் மாட்டாது.இந்த நாசவேலை உலகில் வேறெங்குமேநடைபெற்றிருக்காது. இந்த நஷ்டங்களுக்கு இலங்கைஅரசே கண்டிப்பாகப் 'பொறுப்பேற்க வேண்டும்"

இவ்வாறு கூறிய திரு.கல்யாணசுந்தரம், இலங்கையிலே வாழும் தமிழ் மக்கள் தங்களுக்குரிய பாதுகாப்பை இங்கு உருவாக்கிக் கொள்ள வேண்டும்" என்றும் குறிப்பிட்டார்.

திரு. கல்யாணசுந்தரம் உட்பட அதிமுக,திமுக மற்றும் பல கட்சிகளைச்சேர்ந்த எம்.பீக்கள் டெல்லிப்பாராளுமன்றத்தில் 'இலங்கையில் தமிழர்கள் தீவைப்பு,கொலை கொள்ளை, கற்பழிப்புபோன்றகொடூரங்களுக்கு பலியாவதாகவும்இதற்கு இலங்கை அரசின்படைகளும் ஒத்துழைத்து வருவதாகவும், சிறுபான்மைத்தமிழ் ஈழமக்களை காட்டுமிராண்டித்தனமாக மனிதாபிமானமற்ற முறையில் இலங்கையரசு நடத்துவதால்இலங்கை அரசின் கொடுமையை நிறுத்த இப்பிரச்சினையில் இந்திய அரசு தலையிட வேண்டும்" என்று கவனஈர்ப்புத் தீர்மானம் கொண்டுவந்துபேசியது தெரிந்ததே.

---

### காவத்தையில் மற்றோர் கொலை!

வன்முறைச் சம்பவங்கள் அண்மையிலிடம்பெற்ற போது காவத்தையில் ஸ்ரீ முருகன் ஸ்ரோர்ஸ் வர்த்தக நிலையத்தைச் சேர்ந்த திரு. கே. பெருமாள்,கொலைசெய்யப்பட்டார்- இது சம்பந்தமாக ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

# தமிழர் விடுதலைப்போரில் மரண தண்டனையை ஏற்கவும் தயங்காத தானைத் தலைவர்!



## வன்னியர் வழியே நாம் செல்லவேண்டிய வழி

தமிழ் தேசிய இனத்தின் விடுதலைக்குப்போராடுவது— அதற்காக உலக நாடுகளின் ஆதரவைத் திரட்டுவது— இவையெல்லாம்ராஜத் துரோகம்என்றும் இப்படிச் செய்பவர்களையெல்லாம் சுட்டுக் கொல்லவேண்டும்; தூக்கில் போடவேண்டும்; மின்சாரக் கதிரையில் உட்கார வைக்க வேண்டும்; கமுக மரங்களுக்கிடையிலே கட்டி உடலைக்கிழிக்க வேண்டும்; கழுவேற்ற வேண்டும்; சித்திரவதை செய்து துண்டுதுண்டாக்கி பேரையாற்றிலே வீச வேண்டும்; காலிமுகத்திடலிலே பகிரங்கமாக சுட்டுத்தள்ளவேண்டும் என்றெல்லாம் அண்மையில் புத்தநாடு என்றும் தார்மீக நாடு என்றும் கூறப்படும்சிறீலங்காவின் நாடாளுமன்றத்திலே ஐ.தே. கட்சிஅரசு உறுப்பினர்களால் பேசப்பட்டது.

இப்படிப்பட்ட பயமுறுத்[தல்]கள் எல்லாம்- தமிழர் [வி]டுதலை இயக்கத்துக்குப் [பு]தமையானவையல்ல- இவ[ற்]றைக் கேட்டுப்பயந்து தமி[ழர்] விடுதலைத் தளபதிகள் [ப]ப்பதுங்கியவர்களுமல்[ல]

[19]57 ஆம் ஆண்டு யூன் [மாத]ம் 19 ஆம் திகதியே [அன்]று பிரதமராக இருந்த [கா]லஞ்சென்ற திரு- எஸ், [டப]ிள்யூ. ஆர்.டி. பண்டார[நா]யகா, தமிழர்உரிமைக்கா[கப்] போராடுவது ராஜத்[து]ரோகம் தேசத்துரோகம் [எ]ன்றும் அவ்வாறு தமிழர் [உ]ரிமைக்குப் போராடுவது [ம]ரண தண்டனைக்குரிய குற்[றம்] என்றும் நாடாளுமன்[றத்]திலே பயமுறுத்தினார்.

[ப]ண்டாவின் பயமுறுத்தலுக்கு அப்போது தமிழினத்தை வழிநடத்திய தலைவர்கள் அஞ்சவில்லை.— கலங்கவில்லை. உடனடியாகவே நாடாளுமன்றத்தில் திரு, பண்டாரநாயகாவுக்குஉறைக்கும்படியாகவும்,தமிழினத்தின் உறுதியை எடுத்துக் காட்டும் வகையிலும் பதிலளித்தார் காலஞ்சென்ற கோப்பாய்க் கோமான் அமரர் கு. வன்னியசிங்கம், அவர் சொன்னார்........

"பிறமொழிகளைத் தாழ்வு படுத்தாமல், ஒருவர் தமது தாய்மொழிக்காகப்போராடுவதுதேசத்துரோகம்என்றால் எமது மொழிக்கு சிங்கள மொழியுடன் சம உரிமை கேட்பது தேசத்துரோகம் என்றால்—

"எமது அரசியல், பொருளாதார கலாசாரத் துறைகட்கு கேடுவிளைக்கக் கூடிய தீங்கு தரக்கூடியமனப்பான்மையுடன், இன்னொரு மக்கள் கூட்டம் எம்மீதுநடாத்தும் ஊடுருவலிலிருந்தும், படையெடுப்பிலிருந்தும், எமது தாயகத்தைக் காப்பது இராசத்துரோகம் என்றால்—

"இலங்கையின் 60 சதவீத செல்வத்தை உற்பத்தியாக்கும் மக்களின் குடியுரிமைகளுக்காகப்போராடுவது இராசத்துரோகம் என்றால்-

இலங்கையையே தமது தாயகமாகக் கொண்டுவாழ்பவருக்காக. இலங்கையின் அரசியல் குடியுரிமைகளைப் பெற உரித்துடையவர்கள் என அனைத்துலக மரபுகளாலே அங்கீகரிக்கப்பட்ட மக்களுக்காகப்போராடுவது இராசத்துரோகம் என்றால்-

மலையகத் தோட்டப் பிரதேசங்களிலேதமிழ்த்தொழிலாளர்கள் அடிமை நிலையில் வாழ்வதை எதிர்த்துப் போராடுவது இராசத்துரோகம் என்றால்—

தமிழ் பேசும் பிரதேசங்களிலே தமிழரசு அமைக்கும் வகையில் அரசியலமைப்பை மாற்றியமைக்க வேண்டும் என்று போராடுவது தேசத்துரோகம் என்றால்—

இவற்றை நிலைநாட்டுவதற்காக. சட்டமறுப்பு, அல்லதுசத்தியாக்கிரக இயக்கம் நடத்துவது இராசத்துரோகம் என்றால்—

நான்இந்தஇராசத்துரோக நடவடிக்கைகளில் எல்லாம் ஈடுபட்டு அதனால் ஏற்படக் கூடிய விளைவுகளை எதிர்நோக்க விரும்புகிறேன்:

"ஒவ்வொரு திருப்பத்திலும் பழிச்சொல் ஏற்றுவாழ்வதிலும் இராசத்துரோகக் குற்றம் சாட்டப்பட்டு-அதனால் தூக்கிலிடப்படுவதையும் மகிழ்வுடன் வரவேற்கிறேன்.

"எனது கௌரவ நண்பர், பிரதம அமைச்சர் நாம் இராசத்துரோக நடவடிக்கையில் இறங்கவிரும்புகிறோம் என்றுரைத்து அந்த இராசத்துரோக நடவடிக்கைகள் மரண தண்டனைக்குரியவை என்ற பயமுறுத்தலுக்குப் பதிலாக, நடைபெறவிருக்கும்போராட்டத்திற்கு தமிழ்மக்களைதயார்ப்படுத்துவதற்காக நான்வழக்கறிஞர் தொழிலையும்துறக்கவிருக்கிறேன் என அறிவிக்கிறேன்.

"துணிந்தவனுக்குத் துக்கமில்லை என்ற தமிழ்ப் பழமொழியை நீங்கள் அறிவீர்கள். ஒருவன் செயலாற்ற வேண்டும் என்று திட சங்கற்பம் பூண்டுவிட்டால், அவனுக்கு எவ்வித வருத்தமும் இல்லை. எவ்வித துக்கமும் இல்லை. நான் எப்படிக்கருதுகிறேனோ. அப்படியே தமிழ் பேசும் மக்களும் கருதுகிறார்கள் என்பதிலே எனக்கு எவ்வித ஐயமும் இல்லை..."

இவ்வாறு இலட்சிய உறுதியுடன் —திடசித்தத்துடன் வீரமுழக்கம் செய்த அமரர் வன்னியசிங்கத்தின் வழி வந்தநாம்இலட்சியப்பாதையிலே வரும் இடுக்கண்களை எதிர்த்து வெற்றி பெறுவோமே தவிர, எடுத்தகாரியத்தை தொடுத்து முடிப்போமே தவிர,—பின்வாங்க மாட்டோம்— என்கிற சத்திய மொழியை அவரது 22 வது நினைவு தினமான செப்டம்பர் 17 ஆம் நாள் எடுத்துக் கொள்வோமாக.

—கோவை.

# புத்தர் சிலையை உடனே அகற்றுமாறு அரசிடம்

## வவுனியா அபிவிருத்தி சபை கோரிக்கை

"வணக்கத்துக்குரிய மதம் சார்ந்தசிலைகளை நிறுவுவதற்கும், வழிபாட்டு நிலையங்களை அமைப்பதற்கும் சட்டதிட்டங்கள் உண்டு. மதச்சம்பிரதாய நியதிகள், பொதுவான நியதிகளும் உண்டு. இவைகளை மீறும் வகையில் இரவோடிரவாக நகரசபை அதிகாரிகளுக்கும் அரசாங்க அதிபருக்கும்கூட அறிவிக்காமல் அவர்களிடம் அனுமதி பெறாமல் புத்தர் சிலையை கச்சேரி சந்தியில் நிறுவியுள்ளார்கள் புத்த மதத்திற்கும்சமயத்திற்கும் முரணான வகையில் அமைக்கப்பட்ட இச்சிலை அவ்விடத்திலிருந்து அகற்றப்பட வேண்டும்"

இவ்வாறு, வவுனியாமாவட்ட அபிவிருத்திச் சபைக் கூட்டத்தில், சபைஉறுப்பினரும் தொகுதி எம்,பி.யுமான திரு,தா. சிவசிதம்பரம்பிரேரணையொன்றைச் சமர்ப்பித்துப் பேசுகையில் குறிப்பிட்டார்.

இப்பிரேரணையை உறுப்பினர் திரு.வை. சிற்றம்பலம் ஆமோதித்தார்;

வவுனியா எம்.பி,திரு. சிவசிதம்பரம் பேசுகையில்தெரிவித்ததாவது:-

நாட்டில் பதட்ட நிலையும் அமைதியின்மையும் நிலவிய சந்தர்பத்தில்ஆகஸ்ட்மாதம் 15 ஆம் திகதி இரவு இச்சம்பவம் இடம்பெற்றது! பொலிஸ் பகுதியின் உயர்அதிகாரிகளுக்குகூட இச்சம்பவம் தெரியாது என்று அறிகிறோம் ஆனால், சிலையைநிறுவுவதற்காக பொலிஸ் வாகனங்களைப் பயன்படுத்தி மணல்,செங்கல்போன்றவைகளை கொண்டு சென்றுள்ளனர், உடைந்த வலுப்பட்ட சிலையாக இது இலங்கை மட்பாண்ட கூட்டுத்தாபன விற்பனை லொறியிலிருந்து சில நாட்களுக்கு முன்னர்ஓர்அரசாங்க காரியாலயத்தினால் விலைக்கு வாங்கப்பட்டதென்பதையும் நம்பகமாக நாம் அறிகிறோம்.

இங்கு நிறுவப்பட்ட இச்சிலைமீதுஉணர்ச்சிவசப்பட்ட எவராவது எதையேனும் செய்திருந்தால் கூட இன விரோதம் வெடித்திருக்கும் இது தொடர்பாகஅறிவித்து இதனை அகற்றவேண்டுமென நாம் கேட்டுக்கொண்டதற்கிணங்க அரசாங்க அதிபர் நியாய நடவடிக்கைகளை உடனடியாக மேற்கொண்டார்,

அச் சிலைக்குப் பாதுகாவலாககாவலர்களைஇரவு பகலாகநிறுத்துவதற்குஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. காவல் புரிபவர்கள் அப்பாதையால் செல்லும் வாகனங்களை நிறுத்தி சாரதிகளைசிலைக்குகற்பூரம்கொளுத்திவணங்குமாறு நிர்ப்பந்திக்கிறார்கள்.

சிலையிலிருந்து தொல்லை ஏற்படுத்துவது போதாதென்று காவல் இருப்போர் தொல்லை கொடுக்கிறார்கள். இதுபற்றி நாம் பொலிஸ் அத்தியட்சகருக்கும் முறையிட்டுள்ளோம். இங்குள்ள கத்தோலிக்க நிறுவனங்களும், சைவமத அபிமானிகளும் தங்களதுவணக்கத்திற்குரிய மாதாசிலையையும்பிள்ளையார் சிலையையும் ஏட்டிக்குப் போட்டியாக நிறுவப்போவதாகஎமக்கு அறிவித்துள்ளனர்.

இனப்பூசலோடு வணக்கத்திற்குரிய சிலைகளை நிறுவும் நிலைக்கு எமது மாவட்டம் தள்ளப்படுவது விரும்பத்தக்கல்ல- சட்டதிட்டத்தை மீறி நிறுவப்பட்ட இச்சிலை. இன ஒற்றுமை பேணப்பட வேண்டும் என்பதற்காகஉடனடியாக அகற்றப்படவேண்டும் என்றார்.

இப்பிரேரணையை எதிர்க்கிறீர்களா என்று தலைவர் திரு,மு- சிற்றம்பலம் கேட்டதற்கு ஐ-தே,க- உறுப்பினர்கள் (திருவாளர்கள் பரராசசிங்கம்,த, பரமநாதன்)இருவரும் மௌனம் சாதித்தார்கள். வாக்கெடுப்பின்போது த-வி-கூ- உறுப்பினர்களான திரு-தா- சிவசிதம்பரம்திரு-வை. சிற்றம்பலம் ஆகியோர்ஆதரித்துவாக்களித்தனர் ஐ-தே-க- உறுப்பினர்கள் இருவரும் நடுநிலைமை வகித்தார்கள்-

பிரேரணை நிறைவேறுகிறது என்று தலைவர் திரு.மு. சிற்றம்பலம் சபையில் அறிவித்தார்.

# ஆறு கோடித் தமிழரையும் அரவணைத்த பெருந்தகை

## பேரறிஞர் அண்ணாவுக்கு யாழ் முதல்வர் புகழாரம்



முத்தமிழ் வித்தகராக வாழ்வின் துறைகள் தோறும் பிரபல்யம் பெற்றுத் தமது முத்திரையைப் பதித்துக் கொண்ட அறிஞர் அண்ணா கடல் கடந்த தமிழர்களின் இன்னலிலும்பங்கு கொள்ளத் தவறவில்லை.

சிறப்பாக இலங்கைத் தீவில் ஏற்பட்ட இனக்கலவரங்களால் இங்குள்ள இந்திய வம்சாவளித் தமிழர்களும் பூர்வகுடித் தமிழர்களும் கொடுமைகளுக்கு இலக்கான நேரத்தில்அதனை ஆட்சேபித்து ஆர்ப்பாட்ட அணிவகுப்புக்களைப் பேரணிகளை சென்னையின் வீதிகளில் நடப்பித்துமாபெரும்கண்டனப் பொதுக்கூட்டங்களைச் சென்னைமரீனு கடற்கரை மைதானத்திலே நடத்திய முதல்வர் அறிஞர் அண்ணுதாம்.

"தம்பியுடையான் பகைக்குஅஞ்சான்" என்பதுஅடிக்கடி அறிஞர் அண்ணுவால் பகரப்படும் அவருக்கு மிகவும் பிடித்தமான ஒருவாசகமாகும். என்னதான் தமக்குள்ளே முட்டிமோதிக்கொண்டபோதும் அண்ணுவின் திருவாக்குக்கு ஒப்ப அண்ணுவின் அருமைத் தம்பிகளான தமிழக முதல்வர் எம்.ஜி.ஆர். அவர்களும், எதிர்க்கட்சி முதல்வரான டாக்டர் மு.கருணுநிதிஅவர்களும் ஏனையோரும் அண்ணுவின் வழியிலே இணைந்துஇப்போதும் இலங்கைத்தமிழர் இன்னல் துடைப்பதற்காக அண்ணுவழியிலே பேரணிகளையும் அறப்போராட்டங்களையும் நடத்தி வருவதும், மேற்படி நடவடிக்கைகள் மூலம் இலங்கைத் தமிழர் பிரச்சனைகளுக்கு உலக அந்தஸ்து தேடித்தர முயன்று வருவதும் யாவரும் அறிந்ததே.

ஆறுகோடி உலகத் தமிழர்களையும் ஒன்ருக இணைப்பதே அறிஞருக்கு உலகத் தமிழர்களாகியநாம் செய்யக்கூடிய கைம்மாருகும். உலகில்தமிழன் உள்ளளவும் அறிஞர் அண்ணுவின் நினைவு ஞாலத்தில் போற்றப்படும் என்பதில் ஐயமில்லை;

—இவ்வாறு பேரறிஞர் அண்ணுவின் பிறந்த நாளையொட்டி யாழ் மாநகர மேயர் இராசாவிசுவநாதன் வெளியிட்டுள்ள செய்தியில் குறிப்பிட்டுள்ளார்-

செப்டம்பர் 15ஆம் நாள் தமிழ்க்குலம் தழைக்கத் தோன்றிய பேரறிஞரின் பிறந்தநாள் பெருவிழா தமிழர் வாழும் நாடுகள் எங்கணும் கொண்டாடப்படுகிறது.

# 'ஜனவசம' அரசாங்கத் தோட்டத்திலேயே அவசரகாலச் சட்டத்தின்கீழும் அக்கிரமம்

# பதுளையிலும், பசறையிலும் தமிழ் தோட்டத் தொழிலாளர் மீது தாக்குதல், கொள்ளை, கத்திக்குத்து!

பதுளையில் ஹொப்டன் குருப்தோட்டத்தில்லோவர் டிவிசன்பகுதியிலுள்ளதோட்டத் தொழிலாளர்களின் லயன்களில் கொள்ளையிடப்பட்டுள்ளது. இருவர்கத்திக் குத்துக் காரணமாக பதுளை மருத்துவமனையில்அனுமதிக்கப்பட்டனர்.

இது பற்றிக் கூறப்படுவதாவது:-

பதுளையில் கடந்த புதன் கிழமை [9.9.81] இரவுகிராமப்புறத்தைச் சேர்ந்தவர்களுக்கும் பதுளை ஹொப்டன் குருப் தோட்டத்தில் லோவர் டிவிசன்பகுதியைச் சேர்ந்த தோட்டத் தொழிலாளர்களுக்கும் மோதல் ஏற்பட்டது.

கிராமப் பகுதியைச் சேர்ந்த இரு இளைஞர்கள்தோட்டத் தொழிலாளர்களின் வசிப்பிடமான லயன் அறையொன்றுக்கு டோர்ச்லைட் வெளிச்சத்தை அடித்தனராம். லயன் வீடுகளுக்குப் பின்புறமாக உள்ள கடையொன்றுக்கு சாமான்வாங்க வந்த இருவர்திரும்பிச்செல்கையிலேயே டோர்ச் விளக்கின் ஒளியை லயன் அறையொன்றின் மீது பாய்ச்சினராம். இதனுல் அந்த அறையிலிருந்த தொழிலாளி இருவரையும் ஏசியதாகவும் இதைத்தொடர்ந்துதோட்ட லயன் வீடுகளில் குடியிருக்கும் தொழிலாளர்கள்அங்கு வந்து சூழ்ந்து கொண்டதாகவும் சொல்லப்படுகிறது.

வெளியிலிருந்து வந்தஇருவரில் ஒருவர் கத்தியால்குத்தியதில், தோட்டத் தொழிலாளர் குடும்பங்களைச் சேர்ந்தஇருவர்காயமுற்றுபதுளை மருத்துவமனைக்கு எடுத்துச் செல்லப்பட்டனர். அதையடுத்து அங்குள்ள கடை தாக்கப்பட்டதாகச் சொல்லப்படுகிறது.

இதன் பின்னர்பலவீடுகளிலும் லயன் வீடுகளிலும் இருந்த பொருட்கள் கொள்ளையடிக்கப்பட்டன. தனியார் வீடு ஒன்றுதீவைக்கப்பட்டது. இன்னும் ஒரு வீட்டின் சமையல் அறைப் பகுதி தீயில் எரிந்தது, அங்கிருந்த 27½ சவரின் தங்கம் கொள்ளையடிக்கப்பட்டது,

ஆட்டுத்தொழுவங்கள் தீக்கிரையாகின. பல ஆடுகளும் கொள்ளையடிக்கப்பட்டன. எட்டு லயன் வீடுகளில் கதவுகளும், யன்னல்களும்உடைக்கப்பட்டன. அந்த வீடுகளில் இருந்த பொருட்கள் கொள்ளையடிக்கப்பட்டன.

இது தொடர்பாக தோட்டத் தொழிலாளரிடமிருந்து பொலீசாருக்கு 14புகார்கள் கொடுக்கப்பட்டுள்ளன. தங்கள் தங்க நகைகளையும் ஆடுகளையும் இழந்துவிட்டதாகவும், இவற்றின் பெறுமதி 19,000 ரூபா என்றும் புகார் செய்யப்பட்டுள்ளது.

இராணுவத்தினர் வந்த பின்நிலைமைகட்டுப்பாட்டில் கொண்டு வரப்பட்டது. (ஆதாரம்:- தினபதி 12/9 டெயிலிநியூஸ் 12/9.)

தமிழ்த் தோட்டத்தொழிலாளர்குடியிருக்கும்தோட்ட லயன்களைச் சுற்றியுள்ளகிராமங்களில்சிங்கள மக்கள்குடியிருப்பதுதெரிந்ததே.

இந்த வெறியாட்டத்தின் போது தோட்டத்தொழிலாளரின் நாலரை இலட்ச ரூபா பெறுமதியானபொருட்கள் சூறையாடப்பட்டதாகவும்15மாட்டுத் தொழுவங்களுக்குத் தீமூட்டப்பட்டதாகவும் பொலிசில்புகார் செய்யப்பட்டுள்ளது.

20 பேர் கொண்ட காடையர் கோஷ்டி 10-9.81 வியாழன் இரவு தொழிலாளர் லயன்களைத் தாக்கிமுற்ருகச் சேதப்படுத்தியுள்ளனர்,

இவ் வெறியாட்டத்தின் போது நான்கு தொழிலாளர்கள் கத்திக்குத்துக்கு இலக்காகி பதுளை வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

வீடுகளை இழந்த 168 தொழிலாளர்களும் தம்மை இந்தியாவுக்கு அனுப்பி வைக்குமாறு கோரியுள்ளனர்.

### பசறையிலும் தாக்குதல்

பசறைப் பகுதியில் அரசாங்கத்துக்குச் சொந்தமான ஜனவசம தோட்டத்திலுள்ள எப்டன் குறூப் மேல் பிரிவில் நிகழ்ந்த வன்செயல் தாக்குதலின் விளைவாக 168 தோட்டத்தொழிலாளர்கள் தமது வீடுகளை இழந்து அகதிகளாக்கப்பட்டுள்ளனர்.

### பத்திரிகைத் தணிக்கை

அவசரகாலச் சட்டத்தின் கீழ் 21.8.81 பிற்பகலிலிருந்து பத்திரிகைத் தணிக்கையை அரசாங்கம் அமுலுக்குகொண்டுவந்துள்ளது.

## தி.மு- கழகத் தொண்டர்கள் 16பேர் கைது

இலங்கைத் தமிழர் இன்னல் துடைத்திட நடவடிக்கையெடுக்குமாறுகோரி தமிழகத் தலைநகரான சென்னையிலுள்ள சிறீலங்கா துணைத் தூதரகத்தின் முன்னுல் 10.9.81இல் திராவிடமுன்னேற்றக்கழகம் தடையை மீறித் தனது7ஆவது நாள் மறியற் போராட்டத்தையும் ஊர்வலத்தையும் 10,9-81 வியாழக்கிழமை நடத்தியபோது61திமுகழக தொண்டர்கள் கைது செய்யப்பட்டு ரிமாண்டில் வைக்கப்பட்டனர். இவர்களுக்கு துறைமுகப்பகுதிதிமுகசெயலாளர் திரு. பலராமன்தலைமைதாங்கிபோராட்டத்தை நடத்தினுர்: அவரும் கைது செய்யப்பட்டார்,

## கலவரங்களுக்கு ஐ-தே-சு- வே பொறுப்பு

அண்மையில் ஏற்பட்ட வன்செயல்களுக்கு அரசா கத்தவர்களினதும் அமை சர்கள். எம்.பீக்களினது பொறுப்பற்ற இனவா தைத் தூண்டக்கூடிய மு யில் அமைந்திருந்த சுக்களே காரணமாகு குறிப்பாக ஐ.தே. கட்சி னரே இதற்கான முழு பொறுப்பையும்ஏற்க வேண் டும். ஜனுதிபதியே இதை ஒப்புக் கொண்டுள்ளார். இந்நாட்டில் தமிழ் மக்களுக்குப் பல பிரச்சினைகள் உண்டு. அவற்றை மனிதாபி மானத்துடன் அணுகவேண் டும். வன்முறைகள் அதற் குப் பரிகாரமாகாது.!!

இவ்வாறு ஸ்ரீலங்கா சுத திரக்கட்சி இரத்தினபு அமைப்பாளர் திரு, நந் எல்லாவல கூறியுள்ளார்.

(வீரகேசரி 12.9.8

## பகிஷ்கரிப்பு. .

—1ம்- பக்கத் தொடர்

செய்யப்பட்டிருந்தது, இப்போது மூன்று மாதம் முடிவடைந்துவிட்டது-;

எனவே அடுத்த நடவடிக்கை பற்றிஆராயவும்,அண்மையில் அரசுக்கும் கூட்டணித் தலைமைக்குமிடையே நடைபெற்றபேச்சுவார்த்தையை பொதுச்சபை கலந்தாலோசிக்கவும், பொதுச்சபை உடனடியாகக்கூட்டப்படவேண்டும் என்றும் பாராளுமன்ற உறுப்பினர்கள் எடுக்கும்தவருன முடிவுகளுக்கெல்லாம் பொதுச்சபை 'ரப்பர்ஸ்டாப்' ஆக விளங்க முடியாதென்றும்கூட்டணியின்தீவிர கொள்கை வாதிகள் கருதுகின்றனர்.

## 5 கோடி தமிழர் ..

—1ம்- பக்கத் தொடர்

திட தமது அரசு ஆவன செய்யுமென்றும்ஆனுல் இப்பிரச்சினையை ஐ-நா. சபைக்கு எடுத்துச் செல்லும் நோக்கம் தமது அரசுக்கு இல்லையென்றும் திருமதி காந்தி கூறியுள்ளார்.

தமிழ்நாட்டில் ஹர்த்தாலை அமைதியாக நடத்த ஒத்துழைத்த சகல கட்சியினருக்கும்,தமிழகமக்களுக்கும் தமிழக முதல்வர் எம்.ஜி.ஆர். நன்றி தெரிவித்தார்.

அரசே முன்னின்று இப்படியான ஒரு ஹர்த்தாலை நடத்தியது தமிழக வரலாற்றில் இதுவே முதல் தடவையாகும்,

## புதிய சமசமாஜிகள் கருத்து

தமிழர்விடுதலைக்கூட்டணி முன் வைத்த ஐந்து அம்சக் கோரிக்கைக்கு பூரண ஆதரவு அளித்து வந்த புதியசமசமாசக் கட்சியின் பொதுச் செயலாளர் டாக்டர் விக்கிரமபாகு கருணுரத்தின பின்வருமாறு கருத்து வெளியிட்டுள்ளார்.

(1) மாவட்ட அபிவிருத்திச் சபைத்தேர்தலையடுத்து நடந்த சம்பவங்கள் பற்றி ஆராயவும், தமிழர்கள் மீது ஏவிவிடப்பட்ட கொடூரத் தாக்குதல் பற்றி ஆராயவும் பாரபட்சமற்ற விசாரணைக் குழு நியமிப்பதில் உடன்பாடு ஏற்படவில்லை.

(2) மாவட்ட அபிவிருத்திச் சபையின் கட்டுப்பாட்டின்கீழ் தாயகப்பாதுகாப்புப் படை நிறுவுவதற்குப் பதிலாக மத்திய அரசாங்கம் சமாதானக் குழுக்களையே நியமிக்கவிருக்கிறது.

(3) வடக்கு கிழக்கில் 75 சதவீதம் தமிழ் பொலீசார் நியமிக்கப்படும் அறிகுறிஎதுவுமே தென்படவில்லை-

(4) இராணுவத்தை வாபஸ் பெறும் கோரிக்கை முற்ருகதூக்கியெறியப்பட்டுவிட்டது. பொலீஸ் நிலையங்களும் இராணுவ முகாம்கள் ஆக்கப்பட்டுவிட்டன-

(5) நட்டஈடும் சரியான முறையில் வழங்கப்படவில்லை.

கூட்டணி—அரசு பேச்சுவார்த்தையின்போது தமிழ் மக்களின்சுயநிர்ணயஉரிமை கூட வலியுறுத்தப்படவில்லை"

## கூட்டணிக்காக ஒத்திவைப்பு!

அண்மையில் காலஞ்சென்ற கம்யூனிஸ்ட் தலைவர் டாக்டர் விக்கிரமசிங்காவுக்கு அனுதாபம் தெரிவிக்கும்தீர்மானத்தைகூட்டணி எம்: பீக்களும் அதில் பங்குபற்றுவதற்கு வாய்ப்பளிக்குமுகமாக 24-9.81க்கு சிறீலங்காநாடாளுமன்றம்ஒத்திவைத்துள்ளது குறிப்பிடத்தக்கது!

## இலங்கைப் பிரச் —

—1ம்- பக்கத் தொடர்

வர் உள்ளத்திலும்பதிந்திருக்கும் என்று கருதுகிறேன். இலங்கையில் தமிழ்ப் பெண்களின் கற்புசூறையாடப்படும்போதும், சுற்றுலாவிற்காக தமிழ் நாட்டிலிருந்து இலங்கை சென்ற தமிழன் படுகொலை செய்யப்படும் போதும், அதைப்பற்றிக்கவனிக்காது அமைதியாக இருப்பது சரியல்ல—

அது இலங்கையின் உள்விவகாரம் என நாம் விட்டுவிட முடியாது"

இவ்வாறு சனுர்த்தனம் கூறினுர்.

## 10 ஆண்டு கடூழியச் சிறை!

புலோலி கிராமிய வங்கிக் கொள்ளை வழக்கில் தங்க மகேந்திரன், கார்த்திகேசு நல்லையா, நடராசா அலெக்சாண்டர் ஜெயக்கொடி, ஆறுமுகம் நற்குணநந்தன் ஆகியோருக்கு கொழும்பு மேல் நீதிமன்ற நீதிபதிதிரு. டியூடர் டி. அல்விஸ் 10 ஆண்டுகடூழியச் சிறைத்தண்டனையை 11.9.81இல்விதித்தார்இவர்களில்நற்குணநந்தன்; நல்லையா ஆகிய இருவரும் தலைமறைவாகியிருக்கவே விசாரணைநடந்து தண்டனையும் வழங்கப்பட்டது.

இக்கொள்ளை 1976 ஆம் ஆண்டு மேமாதம் 10ஆம் திகதி நிகழ்ந்தது.

இப்பத்திரிகை சிலோன் நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டட்டரால், யாழ்ப்பாணம், மகாத்மாகாந்திவீதி, 15ஆம் இலக்கத்திலுள்ளசுதந்திரன் அச்சகத்தில் 1981-ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 16ஆம் திகதி புதன்கிழமை அச்சிட்டு வெளியிடப்பட்டது.